# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பெந்தகோஸ்தே ஞாயிறு | 8 ஜூன் 2025

எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்




மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்:

**திருஅவை - இரக்கமுள்ளது ஒருவர் ஒருவரில் இயேசுவின் திருமுகத்தைக் காண அழைப்பு**

# ஆவியார் ஏற்கெனவே செயலாற்றுகின்றார்

பெந்தகோஸ்தே நாளன்று தூய ஆவியார் திருத்தூதர்கள் மற்றும் மரியாவின் மீது ஆற்றல்வாய்ந்த வழியில் இறங்கினார். வேகமான காற்று, நெருப்புபோன்ற நாவுகள், துணிவு இவை அனைத்தையும் பற்றி திருத்தூதர் பணிகள் நூல் நமக்கு சொல்கிறது. அவர்கள் பேசினார்கள், போதித்தார்கள், நகர்ந்துபோனார்கள். திருஅவை பிறந்தது.

சிலசமயங்களில் தொடக்ககால கிறிஸ்துவர்களைப் பார்த்து நாம் பொறாமைப்படலாம். தூய ஆவியாரை இவ்வளவு தெளிவாகவும் மறுக்கமுடியாத வகையிலும் நாமும் அனுபவித்திருக்கலாம் என்று விரும்பலாம். ஆனால் கடந்த காலத்தில் தூய ஆவியார் தடைசெய்யப்படவில்லை.

பெந்தகோஸ்தே அன்றைய நிகழ்வின் முடிவல்ல. அது தொடக்கமே.

இன்று அதே தூய ஆவியார் உயிரோடு உள்ளார். அதே தூய ஆவியார் திருமுழுக்கில் நமக்கு அருளப்பட்டு, உறுதிப்பூசுதலில் நம்மைப் பலப்படுத்துகிறார். அன்னை திரேசா போன்ற புனிதர்கள் நமக்கு இதைக் காட்டுகிறார்கள். ஏழைகளை அன்பு செய்ய அவர் எந்தவொரு தனிப்பட்ட அடையாளத்திற்காகவும் காத்திருக்கவில்லை. தூய ஆவியார் அங்கு ஏற்கெனவே அவரில் பணியில் செயலாற்றிக்கொண்டிருந்தார்; அவருக்குத் தேவையான வலிமையையும் ஒளியையும் அவர் கண்டுகொண்டார். பேறுபெற்ற கார்லோ அக்குடிஸ் நம்முடைய காலத்தின் இளைஞர், இந்த உண்மையை வாழ்ந்து காட்டினார். நற்கருணையின் மீது அவர்கொண்டிருந்த ஆழமான அன்பு, அவரின் எளிமையான இரக்கச்செயல்கள், அவருடைய நம்பிக்கை வாழ்வை எடுத்துச்சொல்ல அவர் தொழில்நுட்பத்தைத் துணிவோடு பயன்படுத்திய விதம் ஆகியவை தூய ஆவியார் இன்னும் உலகிற்குப் புதிய வாழ்க்கையின் வழி சுவாசிப்பதை நமக்குக் காட்டுகின்றன.

நாம் செயல்பட தூய ஆவியாருக்காகக் காத்திருக்கவேண்டுமென்று நாம் அடிக்கடி நினைக்கிறோம். ஆனால் அதுவேறுமாதிரியாகக் கூட இருக்கலாம். நம்பிக்கையால் நாம் உந்தப்பட்டு, இறைவேண்டல் செய்யும்போது, பணி செய்யும்போது, நம்முள் இருந்து தூய ஆவியார் ஆழமாக செயலாற்றுகின்றார். தூய ஆவியாரை ஒரு வினைச்சொல்லாக: உயிருள்ளவராக, செயலாற்றுபவராக, வல்லமையுள்ளவராக நினைத்துப்பாருங்கள்

திருஅவை தூய ஆவியாரை துணையாளர் என்று அழைக்கிறது. இயேசுவும் “என் பெயரால் தந்தை அனுப்பப்போகிற தூய ஆவியாராம் துணையாளர் உங்களுக்கு அனைத்தையும் கற்றுத்தருவார்; நான் கூறிய அனைத்தையும் உங்களுக்கு நினைவூட்டுவார் (யோவான் 14:26) துணையாளர் - உதவியாளர். கற்றுத்தருபவர், முன்னோக்கிச்செல்லும் வழியை நாம் காணமுடியாதபோது, நம் பக்கத்தில் நின்று நம்மைப் பலப்படுத்தி, தெளிவைக் கொண்டுவருபவர்.

எனவே, தயாராய் இருப்பதற்கு காத்திருக்கவேண்டாம். சரியான நேரத்திற்கென காத்திருக்கவேண்டாம். தூய ஆவியார் ஏற்கெனவே கொடுக்கப்பட்டுவிட்டார். இப்போதே செயல்படுங்கள். இப்போதே அன்பு செய்யுங்கள். இப்போதே முன்னோக்கிச் செல்லுங்கள்.

“வாரும், தூய ஆவியே, எங்கள் உள்ளங்களை உமது அன்பால் பற்றியெறியச்செய்யும்”

> தூய ஆவியார் கடவுள் நமக்குத் தந்த பரிசு. நம் ஆன்மாவின் மென்மையான விருந்தினர். நாம் அன்பு செய்யப்படவும், செயல்படவும் நம்மைத் தூண்டுபவர்.
>
> — புனித அகுஸ்தினார்.

## இன்றைய இறைவார்த்தை:

திருத்தூதர் பணி: 2:1-11

திருப்பாடல்: 104: 1,24,29-31, 34

உரோமையர்: 8:8-17, (அ) 1கொரி:12: 3-7, 12-13

யோவான்: 14: 15-16, 23-26 (ஆ) யோவான் 20: 19-23


INTERNAL CIRCULATION ONLY
BUL 23/2025

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org